(முற்பகல் 10.20)

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்திற்கு திருத்தங்கள் அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்கு ஓர் அறிவிப்பு. ஆளுநர் அவர்களின் பேருரைக்கான நன்றி கூறும் தீர்மானத்திற்கு திருத்தங்களைச் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் 14-2-1989 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்குள் கொடுக்க வேண்டும். 16-2-1989 வியாழக்கிழமை அன்று திருத் தங்கள் பேரவையில் மொழியப் பெறும். இப்பொழுது தீர்மானத்தை முன்மொழிந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. என். கணபதி அவர்கள் உரையாற்றுவார்கள்,

6. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின் மீது விவாதம்.

*திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த 9வது சட்டமன்றத்தில் ஆளுநர் அவர்கள் பேருரை ஆற்றிய பிறகு அரசின் கொள்கை விளக்க உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற முகத்தான் இந்தத் தீர் மானத்தை, இந்த அவையில் முன்மொழிந்து உங்கள் அனுமதி யோடு பேச விழைகின்றேன். ''கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடியாம்'' நம்முடைய தமிழ்க் குடியின் தலைமகன் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் 13 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு அமையப் பெற்றுள்ளது இந்த அரசு, இந்த அரசின் கொள்கை விளக்கம், ஒரு தமிழ்க்குடிமகனின் தலைமையிலே விவாதிக்கப் பெறுகின்றது என்பதை நினைக்கின்ற நேரத்தில் தமிழ்த்தாய் எவ்வளவு புளகாங்கிதம் அடைகின்றாள் என்பதைத் தமிழ்நாட்டுமக்கள் அடைகின்றமகிழ்ச்சியைக்கொண்டு நாம் அளவிட முடிகின்றது. இப்போது அமைந்திருக்கின்ற இந்த அரசுக்கு மூல காரணம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். 1969ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டு வரை ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இந்த நாட்டில் தலைமைப் பொறுப்பேற்று இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் பல்வேறு நல்ல திட்டங்களைத் தீட்டி நாட்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்திருந்தாலும், 1976ல் ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டு திடீரென்று ஆட்சியிலே யிருந்து விரட்டப்பட்டு சந்திக்க முடியாத பல கொடுமைகளை, பல சித்திரவதைகளை, பல போராட்டங்களை இன்னும் பல்வேறு நிலைமைகளைச் சந்தித்து இன்றைக்கு மன உறுதியோடு இந்த நாட்டு மக்களுக்கு மீண்டும் பணியாற்றுவேன், இந்த நாட்டு மக்கள் என்னைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அந்த மன